இந்தியத் துணைத் தூதரகம்
யாழ்ப்பாணம்

***

ஊடக அறிக்கை

யாழ் இந்திய துணைத் தூதரகம் மகாத்மா காந்தியின் 74-வது நினைவு நாளை (ஜனவரி 30, 2022) யாழ்ப்பாணம் கார்கில் சதுக்கத்தில் அமைந்துள்ள மகாத்மா காந்தி சிலைக்கு முன்பாக அனுசரித்தது. தியாகிகள் தினமாக இந்நாள், கோவிட்-19 வழிகாட்டுதல்களைப் பின்பற்றி நினைவு கூரப்பட்டது.

2. யாழ்.கார்கில்ஸ் சதுக்கத்தில் உள்ள காந்தி சிலைக்கு பதில் துணைத் தூதுவர் ராம் மகேஷ் அவர்கள் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களான திரு.விக்னேஸ்வரன் திரு.சித்தார்த்தன், யாழ் மாநகரசபை ஆணையாளர் த.ஜெயசீலன் வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி ராஜமல்லிகை சிவசுந்தரசர்மா, பிரதான அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள். திரு.எம்.கே.சிவாஜிலிங்கம், திருமதி உமாச்சந்திர பிரகாஷ், திரு.கஜதீபன், அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் உதவிச் செயலாளர் திரு. சாந்தன் சத்தியகீர்த்தி உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் காந்தி சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். அதனைத் தொடர்ந்து, காந்தி அடிகளாருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தினால் வெளியிடப்பட்ட காந்தியடிகளின் கல்வித் தத்துவம் பற்றிய சிறு புத்தகத்தை கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு.விக்னேஸ்வரன் அவர்களின் கைகளால் பதில் துணைத் தூதுவர் ராம் மகேஷ் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

***

யாழ்ப்பாணம்
30 ஜனவரி 2022